


11வது ஞானச்சாரியார்

# 12வது ஞானச்சாரியார்

## ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்

## அவர்களின் எழுத்துக்கள்





12வது ஞானச்சாரியார்

**ஆவணி மாத வெளியீடு**

**பதினெண்சித்தர்கள் வகுத்தளித்த மெய்யான இந்துமத ஆண்டு 43,73,112**

# ஆதிசிவனார் தமிழில் அருளிய இந்துவேதத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்! இந்துமதத்தைப் புரிந்து கொள்ளுங்கள்!

## 1. இந்துவேத முன்னுரை

“தமிழர்களே! இந்துமதம் உங்களுடையது, இந்துமதம் உங்களின் முன்னோரால்தான் தோற்றுவிக்கப் பட்டது. இந்துவேதம் உங்களுடைய தாய்மொழியான தமிழ்மொழியில்தான் இருக்கிறது”

“தமிழர்களே! தமிழரின் அகப் பண்பாடும், புறநாகரீகமும்தான் இந்துமதம்”

“தமிழில் உள்ள இலக்கியங்கள் அனைத்துமே, உலக மக்கள் அனைவருக்குமே அறிவுரை கூறும் வண்ணம்தான் எழுதப் பட்டுள்ளன”

## 2. தமிழர்களே! இந்துவேத ஆச்சாரியாராகுங்கள்!

“இன்றைக்கு எல்லா நாடுகளிலுமே உள்நாட்டுக் குழப்பங்கள், கலவரங்கள், சண்டைச் சச்சரவுகள், போர்கள் நிகழுகின்றன. இவற்றோடு பெரும்பாலும் எல்லா நாடுகளுமே அண்டை அயல் நாடுகளுடன் போர் நிகழ்த்தத் தயாராகிக் கொண்டே இருக்கின்றன. இவற்றின் உச்ச கட்டமாக உலக நாடுகளே இருபெரும் பிரிவாகி உலகப் போரை நிகழ்த்தத் தயாராகிக் கொண்டிருக்கின்றன. இப்படிப் பட்ட சூழ்நிலையில் உலகுக்கே வழிகாட்டும் வல்லமையும் நல்ல வளமும் தமிழர்களுக்குத்தான் இருக்கின்றது”

**அதற்காகத் தமிழ்ப் பெருமக்கள் அனைவரும் இந்துவேத ஆச்சாரியார்களாகத் தயாராகியே தீர வேண்டும்! தயாராகியே தீர வேண்டும்! தயாராகியே தீர வேண்டும்.**

www.gurudevar.org
Email: indhuism@gmail.com
Cell: 9972130609

**தமிழ்மொழிப் பற்றும், தமிழர் நெறியான இந்துமதப் பற்றும் உள்ளவர்களுக்கு அனுப்பப்படும் சுற்றறிக்கை. இதை நகலெடுத்துத் தமிழ் தெரிந்த அனைவருக்கும் படிக்கக் கொடுக்கவும்.**

# ஆதிசிவனார் தமிழில் அருளிய இந்துவேதத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்! இந்துமதத்தைப் புரிந்து கொள்ளுங்கள்

# இந்து வேத முன்னுரை

(**அ**) இந்துவேதம் என்பது அண்ட பேரண்டங்கள் முழுதுமுள்ள நாற்பத்தெட்டு வகைக் கடவுள்கள், நாற்பத்தெட்டு வகை வழிபடு நிலையினர்கள், பதினெண் சித்தர்கள், நாற்பத்தெட்டு வகைச் சித்தர்கள் எனப்படும் நான்கு வகையினர் மட்டுமே முறையாகவும், முழுமையாகவும் படிக்கின்ற முன்னூற்றுத் தொண்ணூற்றாறு நூல்களை உடைய ஒன்றாகும். இதன் செயல் வடிவமான இந்துமதத்தின் நூல்கள் முப்பத்தாறும் இந்த நால்வகை யினராலேயே முழுமையாகப் படிக்கப் படுகின்றனவாக இருக்கின்றன.

(**ஆ**) ஓர் இந்துவின் வாழ்க்கைக்குத் தேவையான கருத்துக்கள், செய்திகள், செயல் நடைமுறைகள் முதலியவை அனைத்தும் இந்து வேதத்துக்குரிய முன்னூற்றுத் தொண்ணூற்றாறு நூல்களும், இந்து வேத மதத்துக்குரிய முப்பத்தாறு நூல்களும் சேர்த்து ஆக மொத்தம் நானூற்று முப்பத்திரண்டு (396 + 36 = 432) நூல்களில் இருந்துதான் பெறப்படுகின்றன.

(**இ**) ஒவ்வோர் இந்துவும் இந்த நானூற்று முப்பத்திரண்டு நூல்களையும் படிக்கத் தேவையில்லை. கடவுள் என்றுள்ளவர்கள் அவ்வப்போது இந்துக்களுக்குத் தேவையான கருத்துக்கள், செய்திகள், செயல் நடைமுறைகள்,..... முதலியவற்றை நேரில் வந்தே தங்களது கைப்பட எழுதித் தருகிறார்கள், எழுதித் தருவார்கள் என்ற ஏற்பாடு இருக்கிறது.

(**ஈ**) இந்த ஏற்பாடு இந்த அண்ட பேரண்டங்களில் உள்ள ஒவ்வோர் உலகிற்கும் சிறுசிறு மாறுபாடுகளைப் பெற்றுள்ளது. இந்த உலகைப் பொறுத்தவரை அண்டபேரண்டமாளும் பதினெண்சித்தர்களும், அவர்களின் **ஆணையாளர்களான** பதினெட்டாம்படிக் கருப்புக்களும் அடிக்கடி இம்மண்ணுலகில் பிறப்பெடுத்து இந்துக்களுக்குத் தேவையான கருத்துக்கள், செய்திகள், செயல் நடைமுறைகள், வழிகாட்டல்கள், வழித்துணைகள், ஏந்துக்கள், .... முதலியவைகளை ஏட்டறிவாகவும், பட்டறிவாகவும் வழங்குகின்றனர்.

(**உ**) நமது உலகைப் பொறுத்தவரை மூலப் பதினெண் சித்தர்களின் தலைவரான ஆதிசிவனார்தான் இந்துவேத நூல்களையும், இந்துமத நூல்களையும் மானுடர் அனைவருக்கும் பொதுவானதாக வழங்கி யருளினார். இவரே இந்துவேதத்தை இம்மண்ணுலகுக்கு வழங்கும் பதினெண்சித்தர் மடத்தின் முதல் மடாதிபதியாகவும், இந்துமதத்தை இம்மண்ணுலகில் தோற்றுவித்தும் போற்றிப் பேணிக் காத்திடும் பதினெண்சித்தர் பீடத்தின் பீடாதிபதியாகவும் பொறுப்பேற்றார்.

(**ஊ**) இப்பூவுலகில் விலங்குகளோடு விலங்குகளாக வாழ்ந்திட்ட மணீசர்களைப் (மண் + ஈசர் = மணீசர் --> மண்ணின் தலைவர் = உயிரினங்களுக்குத் தலைமை தாங்கும் மணீசர்) பண்பட்ட மனிதர்களாக்கிடவே பதினெண் சித்தர்கள் இந்துவேத நூல்களையும், இந்து மத நூல்களையும் அருட்கொடையாக வழங்கினர். இந்த நூல்கள் அண்ட பேரண்டமாளும் பதினெண் சித்தர்களின் தாய்மொழியும், அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் எழுதப் பட்டுள்ளன.

(**எ**) அனாதிக் காலத்தில் இம்மண்ணுலகின் நிலப்பரப்பு முழுமையாக உறுதிப் படாமல் பெரும்பகுதி மென்மையான மென் துகள்களால் நிறைந்திருந்த காலத்தில் இம்மண்ணுலகு இளமை (மாறாத) முறியாத நிலப்பரப்பை யுடையது எனும் பொருள்பட 'இளமுறியாக் கண்டம்' என்று அழைக்கப் பெற்றது. இந்தத் தென் இமயமலையின் விண்முட்டிய பனிமலை முகடுகளில் பிறந்த தென்கங்கை, தென்யமுனை, தென் பிறம்மபுத்தரன், தென் பிறம்மபுத்திரன், தென் பிறம்மபுத்திறன், பஃறுளி, குமரி, தென் இந்து(சிந்து), .... முதலிய பல பெரிய ஆறுகள்தான் இந்த இளமுறியாக் கண்டத்தை

வளப்படுத்தின. இவற்றுள், 'குமரியாறு' ஒன்றுதான் தென் இமயமலையில் தோன்றி இளமுறியாக் கண்டத்தில் வட எல்லை வரை ஓடிக் கடலில் கலந்தது. எனவே, இந்தக் குமரியாற்றின் பெயரால் இந்த இளமுறியாக் கண்டம் 'குமரிக்கண்டம்' என்ற சிறப்புப் பெயர் பெற்றது. இந்த இரண்டு பெயர்களாலுமே இந்து வேத நூல்களிலும், இந்து மத நூல்களிலும், மற்ற இலக்கிய இலக்கண நூல்களிலும் இந்த நிலப்பரப்பு குறிக்கப் படுகிறது. பதினெண் சித்தர்களின் நூல்களிலும், நாற்பத்தெட்டு வகைச் சித்தர்களின் நூல்களிலும் "இளமுறியாக் கண்டம்" என்ற பெயரே அதிகமாகப் பயன்படுத்தப் படுகிறது.

(**ஏ**) இந்த இளமுறியாக் கண்டம் சூரியனின் கதிர்களைப் போல் நாலாபக்கமும் எண்ணற்ற சிறிய பெரிய நீண்ட நிலப்பகுதிகளைக் கடல் பரப்பின் ஊடே பாதைகள் அமைத்தது போல் பெற்றிருந்தது என்றும் இப்பெரு நிலப்பரப்பு ஏழாயிரம் கல் விரிந்து கிடந்தது என்றும், இப்பெரு நிலப்பரப்பைச் சுற்றிப் பல தீவுகள் சிறியனவாகவும், பெரியனவாகவும் இருந்தன என்றும், இப்பெரு நிலப்பரப்பில் (1) **குறிஞ்சி** எனப்படும் மலையும், மலையும் சார்ந்த இடமும், (2) **முல்லை** எனும் காடும், காடு சார்ந்த இடமும், (3) **மருதம்** எனும் வயலும் வயல் சார்ந்த இடமும் [சமதளப் பகுதி, ஆற்றுப் படுகை, ஊற்று நீர் வளம் உடைய வளமான நிலப்பகுதி... என்று இந்த மருத நிலம் பற்றிய விளக்கம் பல வழங்கப் படுகின்றன] (4) **நெய்தல்** எனும் கடலும், கடல் சார்ந்த இடமும் [மீன் வளம் மிகுந்த கடற்கரைக் காடும், பயிர் விளையும் மணல் சாரியான நிலமும் சேர்ந்த நிலப்பகுதி ... என்று இந்த நெய்தல் பற்றிய விளக்கமும் வழங்கப் படுகின்றன] (5) **பாலை** எனும் வறண்ட நிலப் பகுதியும், சிறிய சிறிய முட்புதர் பலவும், குட்டையான மரம் பலவும் மிகுந்த நிலப்பகுதியும், இயற்கையின் சீற்றத்தால், நீர்வளம் குன்றிட்ட மலை, காடு முதலிய பகுதியும் சேர்ந்த இடமும் .... என்று ஐந்து வகைப்பட்ட இயற்கை வளமுடைய நிலப் பகுப்பு இருந்தது என்றும் இந்து வேத நூல்கள், இந்துமத நூல்கள், பழம்பெரும் மூன்று தமிழ்ச் சங்க நூல்கள் முதலிய அனைத்தும் குறிக்கின்றன. இப்படி இளமுறியாக் கண்டத்து நிலப்பரப்பு பற்றிய பல்வகைப்பட்ட செய்தியினை அறியும் வாய்ப்பு அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழி மூலம் கிடைக்கின்றது.

(**ஐ**) இளமுறியாக் கண்டம் எனப்படும் 'குமரிக் கண்டம்' ஏழாயிரம் கல் நீள அகலத்தில் விரிந்து கிடந்தது. அதில் வானவில்லின் ஏழு வண்ணம் போல் மனித உடலமைப்பிலும், உடல் வண்ணத்திலும் மிகப் பெரிய அளவில் வேறுபாடு பல காணப்பட்டன. அவ்வேறுபாட்டின் அடிப்படையில் ஏழு வகைப்பட்ட மனித இனத்தவர் பகுக்கப்பட்டு இருந்தனர். ஒவ்வோர் இனத்திலும் நுட்பமான வடிவ அமைப்பு வேறுபாடும், வண்ண வேறுபாடும் நோக்கப்பட்டு ஏழுவகையான உட்பிரிவினர் பிரிக்கப்பட்டு இருந்தனர். ஆக மொத்தம் மானுடர் வடிவமைப்பாலும், உடல் வண்ண அமைப்பாலும் #நாற்பத்தொன்பது இனத்தவராகப் பகுக்கப் பட்டிருந்தனர். [#இந்த இனப் பிரிவுக்குரிய வடிவமைப்பும், வண்ண அமைப்பும், ஒன்பது கோள் + பன்னிரண்டு இராசி + இருபத்தேழு விண்மீன் என்ற மூன்றின் கூட்டுத் தொகைக்கு ஏற்ப நாற்பத்தெட்டு உடன், எதிலும் சேராத ஒரு பொதுவகை என்று ஒரு வகையும் ஆக மொத்தம் 49 வகையினர் என்று பிரித்துப் பட்டியலிடப் பட்டதாகவும் ஒரு குறிப்பு குருபாரம்பரியம், இலக்கிய பாரம்பரியம், அரச பாரம்பரியம் என்ற மூன்று நூல்களிலும் காணப்படுகிறது] இந்த நாற்பத்தொன்பது வகைப்பட்ட மானுடரும் நாற்பத்தொன்பது என்ற எண்ணிக்கையில் தனி நாடுடையவராய் வளர்ந்தனர். ஆனால், அனைவருக்குமே அநாதிக் காலத்திலும், ஆதிக்காலம் எனப்படும் முதல் யுகத்திலும், அண்ட பேரண்டமாளும் பதினெண் சித்தருடைய தாய்மொழியும்; அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழியுமான அருளூறு அமுத தெய்வீகச் செந்தமிழ் மொழிதான் தாய்மொழியாக இருந்தது. அதாவது, பதினெண் சித்தர், நாற்பத்தெட்டு வகைச் சித்தர்கள், நாற்பத்தெட்டு வகைப்பட்ட கடவுளர்,

நாற்பத்தெட்டு வகைப்பட்ட வழிபடு நிலையினர், ... முதலிய பலரும் இளமுறியாக் கண்டம் முழுதுமிருந்த அனைத்து வகைப்பட்ட மானுடருக்கும், அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியையே கற்றுக் கொடுத்து இளமுறியாக் கண்டத்தவர் அனைவரும் தமிழரே என்றாக்கினர். இதனால், இளமுறியாக் கண்டமே 'தமிழகம்', 'தமிழ்நாடு', 'தமிழ் கூறும் நல்லுலகு', 'தமிழ் வழங்கும் பெருநிலப் பரப்பு', 'தமிழ் நிலம்' என்று குறிக்கப் படலாயிற்று. இப்படி இம்மண்ணுலகின் முதல் நிலப்பரப்பு தமிழ்மொழிக்கும், தமிழருக்குமுரிய தாய்நாடாயிற்று. இவ்வாறாகவே, "தமிழரே இம்மண்ணுலகின் முதல் குடியினர்", "தமிழினமே இம்மண்ணுலகின் முதல் இனம்", "தமிழ்மொழியே இம்மண்ணுலகின் முதல்மொழி, மூலமொழி, தாய்மொழி", "தமிழகமே மனித நாகரீகத்தின் தொட்டில்", "தமிழ்ப் பண்பாடே உலக மானுடப் பண்பாட்டின் மூலம், ஆதாரம், அடிப்படை, கரு", ... என்று சிறப்பிக்கப்படும் நிலை உருவாயிற்று.

(ஓ) அண்டபேரண்டமாளும் பதினெண் சித்தர்கள் இம்மண்ணுலகின் பல பகுதிகளில் இயற்கையாகப் பயிரினமும், உயிரினமும் பல்வேறு வகையுடையனவாகத் தோன்றியது போல் மானுடரும் உலகம் முழுதும் தோன்றினர் என்ற பேருண்மையையும்; இம்மானுடர் ஆரம்பக் காலத்தில் இம்மண்ணுலகப் பயிரின உயிரின வகையனைத்துக்கும் தலைவராகவே [மண் = மண்ணுலகத்தவர், ஈசர் = தலைவர் --> மண் + ஈசர் --> மணீசர்] வாழ்ந்து 'மணீசர்' என்று பெயர் பெற்றனர். அவர்களை மனதையும், சிந்தையையும் உடைய மனிதராக மாற்றுவதற்கே இந்து வேதம் வழங்கப் பெற்றது. இந்த

(1) "இந்து வேதமே இவ்வுலகின் முதல் வேதம், மூல வேதம், ஆரம்ப வேதம், தாய் வேதம்"

(2) இந்த இந்துவேதமே இம்மண்ணுலகம் முழுதும் தோன்றிட்ட, தோன்றுகின்ற, தோன்றக் கூடிய மானுட இனத்தார் அனைவருக்கும் பொதுவானதாக வழங்கப் படுகிறது,

(3) இந்த இந்து வேதமே உலகம் முழுதும் தோன்றுகின்ற மானுடர் இனத்தவர் அனைவருக்கும் விடுதலை வாழ்வும், மானுடர் மொழி அனைத்துக்கும் விடுதலை வாழ்வும், மானுடர் உருவாக்கும் நாடு அனைத்துக்கும் விடுதலை வாழ்வும் உருவாக்கித் தர வல்லது.

(4) இந்து வேதமே உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தை உருவாக்கிட வல்லது,

(5) இந்த இந்து வேதமே உலக ஆன்ம நேய ஒருமைப்பாட்டை உருவாக்க வல்லது,

(6) இந்த இந்துவேதமே கடவுளர் அனைவரும் அடிக்கடி மனிதரைச் சந்திக்க வந்து மனிதருக்கு உதவும்படி செய்கிறது.

(7) இந்த இந்துவேதமே விரும்புகின்ற மனிதர் அனைவரும், கடவுளர் அனைவரையும் சந்திக்க உதவுவதோடு, மனிதரனைவரும் கடவுளராகவே மாறிடுவதற்கு உதவுகிறது

(8) இந்த இந்துவேதமே கடவுளருக்கும், மனிதருக்குமிடையே நல்ல உறவும் நட்பும் தோழமையும் செழித்தோங்கச் செய்கிறது

(9) இந்த இந்து வேதம்தான் இம்மண்ணுலகின் நிலப்பரப்பு, நீர்ப் பரப்பாகியும், நீர்ப்பரப்பு நிலப்பரப்பாகியும் தோன்றக் கூடிய புதிய புதிய இனத்தவர் அனைவர்க்கும் உதவுவதற்காகக் கோடிக் கணக்கில் கடவுளரை இம்மண்ணுலகிற்கு அண்டபேரண்டம் அனைத்திலுமிருந்து வரவழைத்தும்; இம்மண்ணுலகிலேயே கோடிக்கணக்கான கடவுளர் தோன்றுவதற்கும் தொடர்ந்து ஏற்பாடு செய்திடும் ஆற்றலையும், வழிவகையையும் பெற்றிருக்கின்றது.

(10) இந்த இந்துவேதமே அருவக் கடவுளர், அருவுருவக் கடவுளர், உருவ அருவக் கடவுளர், உருவக் கடவுளர் என்று நான்கு வகையான வடிவமைப்பு உடைய கடவுளரையும் மானுடருக்கு அறிமுகப் படுத்தி, அருளுலகில் நல்ல உறவு நிலையும், உரிமை நிலையும் தொடர்ந்து நிகழ்த்திடச் செய்கிறது,

(11) இந்த இந்துவேதமே 'கடவுளர் காலம் தோறும் கணக்கற்றுப் பிறக்கின்றனர், இறக்கின்றனர், பிறப்பிறப்பற்ற பெருநிலை பெறுகின்றனர்' என்ற பேருண்மையினை விளக்கிக் கடவுளரின் பெயராலோ, அல்லது வேதத்தின் பெயராலோ, அல்லது வேதத்தின்

செயல்வடிவமான மதத்தின் பெயராலோ, மானுடரிடையே பிரிவினையோ! வேற்றுமையோ! போட்டியோ! பொருமையோ! பகைமையோ! சண்டை சச்சரவோ! அழிவுக்குரிய போரோ! ... நிகழ்ந்து விடாமல் தடுக்கிறது.

(12) இந்த இந்துவேதம்தான் ஒவ்வொரு குடும்பத்தவரும் அவரவரின் குடும்பத்தைச் சேர்ந்த முன்னோரில் பட்டவர், ஆண்டவர் என்ற நிலை பெற்றோரைப் போற்றிப் பணிந்தாலேயே போதும், அவர்க்கு எல்லா வகையான வளமும், நலமும், பொலிவும், வாழ்வியல் பேறும் சித்திக்கும் என்று வழிகாட்டுகிறது.

(13) இந்த இந்துவேதம்தான் ஒவ்வொரு குலத்தவரும் அவரவரின் குலத்தைச் சேர்ந்த முன்னோரில் தெய்வநிலை பெற்றோரைப் போற்றிப் பணிந்தாலேயே போதும், அவர்க்கு எல்லா வகையான நலமும், வளமும், வலிவும், பொலிவும், வாழ்வியல் பேறும் சித்தித்திடும் என்று வழிகாட்டுகிறது.

(14) இந்த இந்துவேதம்தான் ஒவ்வொரு கிராமத்தாரும் அவரவரின் கிராமத்தில் உள்ள தேவர், தேவதை அனைவரையும் போற்றிப் பணிந்தாலேயே போதும், அவர்க்கு எல்லா வகையான நலமும், வளமும், வலிவும், பொலிவும், வாழ்வியல் பேறும் சித்தித்திடும் என்று வழிகாட்டுகிறது

(15) இந்த இந்துவேதம்தான் ஒவ்வொரு நாட்டாரும் அவரவரின் நாட்டுக்குரிய கடவுளர் அனைவரையும் போற்றிப் பணிந்தாலேயே போதும், அவர்க்கு எல்லா வகையான நலமும், வளமும், வலிவும், பொலிவும், வாழ்வியல் பேறும் சித்தித்திடும் என்று வழிகாட்டுகிறது.

(16) இந்த இந்துவேதம்தான் 'கோயில் தோறும் பல கடவுளர் வாழுகின்றனராதலால் அவர்க்கு மடநூல் விதிப்படி அக் கடவுளருக்கு விருப்பமான உணவைச் சமைத்துப் படையலிட்டுத்தான் வழிபட வேண்டும், வணங்க வேண்டும், கும்பிட வேண்டும், பூசை செய்ய வேண்டும்' என்று வழிகாட்டுகிறது.

(17) இந்த இந்துவேதம்தான் விருப்பமான கடவுளரை விருப்பமான இடத்தில் அல்லது கோயிலில் இருந்து 'எள்ளல் முறை', 'ஏசல் முறை', 'அழுகை முறை', 'தொழுகை முறை' என்ற நான்கு முறையினில் விருப்பமான முறையில் போற்றிப் பணிந்திடல் வேண்டும் என்று வழிகாட்டுகிறது.

(18) இந்த இந்துவேதம்தான் அருளுலக பயிற்சி, முயற்சி, தேர்ச்சி, முதிர்ச்சி என்ற நான்கு நிலைகளுக்காக மானுடர் அவரவர் விருப்பம் போல், வசதி வாய்ப்புப் போல் அருளுலகில் செயல்பட்டிடக் கால் மடக்கிக் கை கட்டிக் கண்மூடி அமர்ந்து வாய்மூடிக் கடவுளரையே பத்தி செய்யும் **'திருமுறை'** என்ற ஒரு முறையையும், பத்தியாளர் தன் விருப்பப்படியும் வசதி வாய்ப்புப் படியும் கிழங்கு, தண்டு, இலை, பூ, காய், கனி, பயறு, கூலம் முதலிய பயிரினங்களை அப்படியே படையலாக இட்டோ அல்லது சமைத்துப் பக்குவப் படுத்திப் படையலிட்டோ பத்தி செய்யும் **'தருமுறை'** என்ற ஒரு முறையையும், பத்தியாளர் தன் விருப்பப்படியும் வசதி வாய்ப்புப் படியும் தான் பெரிதும் விரும்பி உண்ணக் கூடிய மீன், ஆடு, கோழி, புறு, ... முதலியவற்றைப் பலியிட்டுச் சுவைகரமாக மடநூல் விதிப்படி சமைத்துப் படையலிட்டுப் பத்தி செய்யும் **'கருமுறை'** என்ற ஒரு முறையையும், பத்தியாளர் தம் விருப்பம்போல் வசதி வாய்ப்புப் போல் தமக்கேற்ற குருவைத் தேர்ந்தெடுத்து அவருடனேயே வாழ்ந்து அவருக்கு அணுக்கத் தொண்டு செய்வதையே கடவுளிடம் பத்தி செய்யும் முறையாகக் கருதும் **'குருமுறை'** என்ற ஒரு முறையையும் தெளிவாக விளக்கி யுரைத்து **நான்கு வகையான பத்தி முறையினை** வழங்குகிறது.

(19) இந்த இந்துவேதம்தான்; 'மானுடர் தம் விருப்பம் போல்; தமக்கு விருப்பமான திசையில் தமது கடவுளரின் கோயிலை அமைத்து வழிபாடு செய்யலாம் என்று கூறுவதோடு, கோயிலுக்குச் செல்ல இயலாதவர் அக்கோயில் இருக்கின்ற திசையைப் பார்த்துத்

தமது பத்தியைச் செலுத்தலாம்' என்றும் கூறுகிறது.

(20) இந்த இந்துவேதம்தான் 'கடவுளைக் கண்டவராலேயே, கடவுளரின் அனைத்து வகையான ஆற்றலினையும் அளப்பரிய அருட்செயல் பலவற்றையும் கடவுளைக் காணு தார் உணரும் பொருட்டுக் கருத்து விளக்கச் சித்திரமாகவும் சிலையாகவும் வடித்து குடமுழுக்கு முறைப்படி அவற்றிற்கு உயிர்ப்பும், புத்துயிர்ப்பும் வழங்கிச் செயல்படுவதுதான் 'உருவ வழிபாடு', 'சிலை வழிபாடு', 'கோயில் வழிபாடு', .... என்று வளர்ந்துள்ளன. எனவே, பூசை செய்வதற்குரிய சித்திரம், சிலை, பிற வடிவமைப்பு முதலியவை கடவுளாகவே இருக்கின்றன என்பதை உணர்ந்து அவற்றிற்கு நீராட்டல், ஆடையணிகலன்கள் அணிவித்தல், மடநூல் சாத்தர, சாத்திர, சாத்திற வகைப்படி உணவுப் பொருட்களை பக்குவமாக வகைவகையாகச் சமைத்துப் படையலிடுதல், கோயில் வளாகத்தில் பாடல், ஆடல், கூத்து, நாடகம், பிற கேளிக்கை, வேடிக்கை,... நிகழ்த்துதல், ... முதலியன அனைத்தும் கடவுளரால் மகிழ்வோடு ஏற்றுக் கொள்ளப் படுவனவேயாகும் என்று மிகத் தெளிவாக மானுடர் கடவுளரோடு தொடர்பு கொள்ளும் முறை பலவற்றையும் விளக்குகிறது.

(21) இந்த இந்துவேதம்தான், இவ்வுலகில் இயற்கையாகவே திருக்கல், தருக்கல், கருக்கல் என்று மூன்று வகைக் கடவுளர் கணக்கற்றுத் தோன்றுவது போலவும், குருக்கல் எனும் கடவுளர் அருளாளரால் கணக்கற்றுத் தோற்றுவிக்கப் படுவது போலவும், காற்று கருப்பு பேய் பிசாசு எனும் நால்வகையினரும் இயற்கையாகவே தோன்றுகின்றனர் என்றும், இவர்களில் 'பேய்' அல்லது 'ஆவி' எனப்படும் ஒரே ஒரு வகை மட்டும் இறக்கின்ற அல்லது இறக்கும்படி செய்யப்படுகின்ற எல்லாவகை உயிரினத்திலிருந்தும் தோன்றுகின்றது; என்றும் மிகத் தெளிவாக அருளுலகத்தைப் பற்றிக் கூறுகிறது.

(22) இந்த இந்துவேதம்தான் 'அருளுலகில் நல்லவராகக் கடவுளர், வழிபடுநிலையினர், தெய்வம், தேவர் என்று நான்கு வகையினரும்; அல்லவராகக் காற்று, கருப்பு, பேய், பிசாசு என்ற நால்வகையினரும் இருக்கின்றனர் என்ற பேருண்மையை விளக்குகிறது.

(23) இந்த இந்துவேதம்தான்; 'இவ்வுலக வாழ்க்கையில் அல்லவர் எனப்படும் காற்று, கருப்பு, பேய், பிசாசு எனும் நால்வரால் நோய், நொடி, தொல்லை, துன்பம் ... முதலியவை ஏற்படும்போது; அவற்றிலிருந்து மானுடரை காப்பதற்காகவே நல்லவர் எனப்படும் கடவுளர், வழிபடுநிலையினர், தெய்வம், தேவர் எனும் நால்வரும் உள்ளார்கள். இந்நால்வரையும் உதவிக்கு அழைத்துத் துணையாக்கிக் கொண்டு உலகியலாக நல்வாழ்வு வாழுவதற்குரிய வழிவகையினைக் கணக்கற்றுக் கூறுகிறது. இப்படி, இந்துவேதம் கூறுகின்ற வழிவகை அனைத்தும்; இந்த உலகில் தோன்றக் கூடிய எல்லா மொழியினருக்கும், இனத்தாருக்கும், நாட்டாருக்கும் உரியனவேயாம்' என்று இந்துவேதமே கூறுகிறது.

(24) இந்த இந்துவேதம்தான் இந்த உலகில் தோன்றக் கூடிய மொழியினர் அனைவருமே தம்முடைய மொழியின் ஒலி நயத்துக்கேற்ப ஒலியைச் சரி செய்து கொண்டு ஓதுதற்குரிய பூசைமொழி வாசகத்தைக் கணக்கற்று வழங்குகிறது. இவற்றின் ஒலிநயம் கெடாமல் எந்த மொழியினர் ஓதினாலும் பெருமளவு பயன் கிடைக்குமென்று கூறுகிறது. இதனால்தான் இந்த இந்துவேதம் இம்மண்ணுலகில் தோன்றக் கூடிய அனைத்து வகைப்பட்ட இனத்து மானுடருக்கும் பொதுவான ஒன்று என்று இந்து வேதத்தாலேயே கூறப்படுகிறது.

(25) இந்த இந்துவேதம்தான் 'அருளுலகின் முப்பெரும் உண்மை', 'அருளுலகின் முக்கோணச் சத்தி பீடப் பேருண்மை' என்று தலைப்பிட்டு (1) ஒரு மொழிக்குரிய கடவுளர் அவருடைய மொழியினருக்கு மட்டுமே உதவுவர், (2) ஒரு நாட்டுக்குரிய கடவுளர் அவருடைய நாட்டவர்க்கே உதவுவர், (3) ஓர் இனத்துக்குரிய கடவுளர் அவருடைய இனத்தவர்க்கு மட்டுமே உதவுவர் என்பதால்

எல்லோருமே அவரவர் பிறப்பால் அமையும் தாய்மொழிக்குரிய கடவுளரையும், தாய்நாட்டுக்குரிய கடவுளரையும், தாய்வழி இனத்துக்குரிய கடவுளரையும் மட்டுமே போற்றிப் பேணிப் பூசை செய்து, வழிபாடு செய்து வணங்கி கும்பிட்டு வாழ்த்திப் பணிந்து பயனடைய முடியும், பயனடைய வேண்டும் என்று மிகத் தெளிவாகக் கூறுகிறது.

(26) இந்த இந்துவேதம்தான் மனிதர் கடவுளாவதற்குரிய பூசைமொழியை வழங்குகிறது.

(27) இந்த இந்துவேதம்தான் கடவுளர் மானுடரைக் கடவுள் ஆக்குவதற்காகவே பாடுபடுகிறார்கள். அதற்காகவே இந்துக் கோயில்கள் அனைத்திலும் பல கடவுளர் வாழுகின்றனர். எனவேதான், கோயில் அனைத்தும் மானுடரைக் கடவுளாக்கும் பயிற்சிப் பள்ளியே, கோயில் அனைத்தும் கடவுளர் அருட்கல்வி அளிக்கும் குருகுலமே, கடவுளர் அனைவருமே பூசாறியாக, குருவாக, குருமாராக, குருதேவராகச் செயல்படுகின்றனர் ... என்று பல அரியபெரிய உயரிய தத்துவத்தை வெளியிடுகிறது இந்துவேதம்.

(28) இந்த இந்துவேதம்தான், கடவுளர் போல் மானுடரும் இயற்கையாகத் தோன்றுகின்றனர், மறைகின்றனர், தோற்றம் மறைவு அற்றும் வாழுகின்றனர். அதாவது, மானுடருக்கு பிறப்பு, இறப்பு, பிறப்பிறப்பற்ற பெருநிலை எனும் மூன்று நிலை இருப்பது போலவே கடவுளருக்கும் உண்டு. ஆனால் வாழும் கால அளவுதான் வேறுபட்டிடும். எனவே, கடவுளரும், மானுடரும் ஒருவருக்கொருவர் அன்பு பூண்டு நட்பையும், தோழமையையும் வளர்த்து வாழ வேண்டும் என்று கூறுகிறது.

(29) இந்த இந்துவேதம்தான் கடவுளர்க்கு அருவநிலை, அருவுருவ நிலை, உருவ அருவ நிலை, உருவ நிலை என்ற நான்கு நிலையிருப்பதால் அவரவர் விருப்பப்படி பிறர் காண வாழ்ந்து எதையும் இட்டு, தொட்டு, சுட்டி ஆண்டு அனுபவித்து வாழ முடியவில்லை. அதனால், 'மானுடப் பிறப்பே புனிதப் பிறப்பு', 'மானுடப் பிறப்பே உய்வுக்குரிய உயரிய பிறப்பு', 'மானுடப் பிறப்பே துய்ப்புக்குரிய அரிய பிறப்பு' என்று கூறுகிறது.

(30) இந்த இந்துவேதம்தான் 'கடவுளரும் மானுடராய் பிறப்பெடுக்கவே பெரிதும் முயலுகின்றனர்' என்று கூறுகிறது.

(31) இந்த இந்துவேதம்தான் மானுடருக்கு உதவிடத் திருத்தோற்றம் அளிக்கும் கடவுளரும், நேரில் வரும் கடவுளரும், மானுடராய்ப் பிறப்பெடுக்கும் கடவுளரும், இம் மண்ணுலகிலேயே பெரிதும் தங்கிடுகின்றனர். அதுவும் (1) அதிகஅளவில் கடவுளர் தமிழகத்தில்தான் பிறந்திருக்கின்றனர், பிறந்து கொண்டிருக்கின்றனர், பிறப்பெடுக்கப் போகின்றனர், (2) அதிக அளவில் கடவுள் தமிழராகத்தான் பிறந்திருக்கின்றனர், பிறந்து கொண்டிருக்கின்றனர், பிறப்பெடுக்கப் போகின்றனர், (3) அதிகஅளவில் கடவுளருக்குத் தெரிந்தது அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழிதான். ஏனெனில், என்றென்றும் எல்லாக் கடவுளரும் அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் 'இந்து வேதம்' ஒன்றை மட்டுமே படித்துக் கொண்டிருக்கும் நிலைதான் அருளுலகில் இருக்கின்றது, இருந்திடும் என்று கூறுகிறது.

(32) இந்த இந்துவேதம்தான் கடவுளர் மானுடருக்குத் தந்தையாக, தாயாக, காதலனாக, காதலியாக, உடன் பிறந்தவராக, மகனாக, மகளாக, தோழராக, நண்பராக, தொண்டராக, சேவகராக, அடிமையாக நேரில் வந்து உதவி செய்து காப்பாற்றக் காத்திருக்கின்றனர். ஆனால், மானுடர் இந்துவேத வழியாகக் கடவுளரோடு தொடர்பு கொள்ளத் தெரியாதவராக, புரியாதவராக வாழுவதுதான் உலகியலாக இருக்கிறது என்று கூறுகிறது.

(33) இந்த இந்துவேதம்தான், இம்மண்ணுலகுக்கு இந்து வேதத்தை அருளிய பதினெண் சித்தர் மடத்தின் மடாதிபதியும், இந்து வேதத்தை இம்மண்ணுலகில் உருவாக்கிய பதினெண் சித்தர் பீடத்தின் பீடாதிபதியுமான அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியாரே காலம் தோறும் மானுடருக்கு இந்து வேதத்தின் அருமை, பெருமை, அரிய பயன் முதலியவற்றை விளக்க மானுடர் இந்துவேத வழியில்

மெய்யான உய்வு பெற வழி செய்கின்றனர் என்று கூறுகிறது.

(34) இந்த இந்துவேதம்தான் ஆவி, ஆன்மா, ஆருயிர் எனும் மூன்றும் இணைந்து உருவாகும் சீவனின் விளக்கமாக, **குறியீடாக, இலக்கமாக** 'இலிங்க வடிவம்' உருவாக்கப் பட்டுள்ளது. இந்த 'இலிங்க வடிவம்' ஆண்மை நிலை, பெண்மை நிலை, இந்த இரண்டும் கலந்த அலிநிலை என்று மூன்று வகைப்படும். அதாவது அலிநிலைக்குரியது 'இலிங்க வடிவம்' எனப்படும். ஆனால் இந்த இலிங்க வடிவத்தை நிலைநிறுத்தும் வடிவ அமைப்புக்கேற்ப **'ஆண்மை நிலைக்குரியதைச் சீவலிங்கம்'** (சிவன் இலிங்கம்) என்றும், **'பெண்மை நிலைக்குரியதைச் சத்திலிங்கம்'** (சத்தி இலிங்கம்) என்றும், அலிநிலைக்குரியதை **'இலிங்கம்'** என்றும் மூன்றுவகை இலிங்க வடிவம் போற்றிப் பேணிப் பணிந்து பூசை செய்து மானுடர் பயனடைய வழங்கப் பட்டுள்ளன என்று கூறுகிறது.


(35) இந்த இந்துவேதம்தான், 'மானுடர் பாலுகர் பருவம் முதல் பதினெட்டு வயது வரை செய்யும் உடற்பயிற்சி என்றும், பதினெட்டு வயது முதல் முப்பத்தாறு வயது வரை செய்யும் உடற்பயிற்சி என்றும், முப்பத்தாறு வயது முதல் ஐம்பத்து நான்கு வயது வரை செய்யும் உடற்பயிற்சி என்றும், மூன்று வகைப்பட்ட உடற்பயிற்சி வகையினையும் பயிற்சி செய்யும் கால அளவினையும் கூறுகிறது. இத்துடன் ஐம்பத்து நான்குக்கு மேல் நடப்பது மட்டுமே போதுமென்று கூறுகிறது.

(36) இந்த இந்துவேதம்தான், பல்வேறு வகையான நோய் பற்றியும் அவற்றிற்குரிய பச்சிலை மூலிகை மருத்துவமுறை பற்றியும், காயசுத்தி, காயசித்தி, காயகல்பம், ககனகுளிகை, அமுதம், நச்சுமுறி, நவநஞ்சுச் சூரணம், பல்துலக்கும் தூள், பசிய இலை வேர் பட்டை குச்சி ... முதலியன பற்றி நிறைய செய்தி வழங்குகிறது.

(37) இந்த இந்துவேதம்தான் மானுடரின் முற்பிறப்பு, இப்பிறப்பு, மறுபிறப்பு முதலியன பற்றியும், மானுடரில் மனித இனத்தின் மென்மையே இல்லாத அரக்கர் நிலையினர், விலங்கு நிலையினர், பேய்நிலையினர், வேதத்தையும் கடவுளையும் வெறுப்பவர், மறுப்பவர், எதிர்ப்பவர், துறப்பவர், மறப்பவர்.... முதலியோர்; மனித இனத்தின் மென்மையின் விளக்கமான அன்பாளர், பண்பாளர், வேதத்தையும் கடவுளையும் மிகுதியாக விரும்பிடும் அருளாளர், பத்தியாளர், ... எனப்படும் பல்வேறு வகையினர் தோற்றம், தோற்ற மாற்ற ஏற்ற இறக்கம், இன்பதுன்பம், இழிவழிவு, ... முதலியவை அனைத்தையும் தக்க சான்றும், ஊன்றும், காரண காரியமும் வழங்கி விளக்குகிறது

.... ... ... ...

என்று இந்த அளவில் **பதினெண் சித்தர்கள், அண்டபேரண்ட மானுடர் அனைவரும்** ஒற்றுமையுடனும், நட்புடனும், தோழமையுடனும், அன்புடனும், நிறைவுடனும், நிம்மதியுடனும், சமத்துவப் பற்றுப் பாச நோக்குடனும், எதையும் பகிர்ந்துண்டு கூடி வாழும் போக்குடனும் அமைதியான வாழ்வு வாழுவதற்காக **'மானுடரின் விழியாக, மானுடரின் வழியாக, மானுடரின் வழிகாட்டியாக, மானுடர் வழித்துணையாக, மானுடரின் வழிப்பயனாக'** அருளப் பட்டுள்ள இந்துவேதக் கருத்துப் பற்றிய விளக்கப் பட்டியல் நிறைவு செய்யப் படுகிறது.



**குவலய குருபீடம்,**
**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி**
**ஞாலகுரு சித்தர் அரசயோகி கருவூரர்**

# தமிழர்களே! இந்துவேத ஆச்சாரியாராகுங்கள்

1. இன்றைய தமிழகத்தின் நிலை, தென்னிந்தியாவின் நிலை, இந்தியாவின் நிலை, ஆசியாக் கண்டத்தின் நிலை, ஐந்து கண்டங்களும் சேர்ந்த உலகின் நிலை.... முதலியவை அனைத்தையும் பொறுப்போடும், பொறுமையோடும், நிதானத்தோடும் முறையாக ஆராய்ந்து பார்த்து எடுக்கப்பட்ட முடிவின் பயனாகவே 'இந்துவேதம்' மீண்டும் பன்னிரண்டாவது முறையாக இந்துவேத இந்துமதத் தலைமை ஆச்சாரியக் குருபீடத்தால் வெளியிடப் படுகின்றது. இதில் எந்த விதமான குறுகிய மத வெறியோ!, மதப் போட்டாப் போட்டிப் பொறாமையோ! ... இல்லை! இல்லை! இல்லை! இல்லவே இல்லை!

2. குவலய குருபீடமான ஞாலகுரு, பரப்பிரம்மம், அனாதி ஆதி கடந்த தம்பிரான் அடிகளார், குருமகா சன்னிதானம், அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார் அவர்கள் 'உலக மத வெறிகளை அகற்றி மதநெறி போக்குத் தழைத்திட வேண்டும்' என்பதற்காகவே; 'இம்மண்ணுலகின் முதல் வேதம், முழுமையான வேதம், அனைத்து மொழியினருக்கும் இனத்தவருக்கும் நாட்டவருக்கும் பொதுவாக வழங்கப்பட்ட வேதம், கடவுளர்களாலேயே காலங்கள் தோறும் புதுப்பித்து எழுதித் தரப்படும் வேதம், கடவுளர்களுக்கும் மானுடர்களுக்கும் உய்வுக்குரிய மெய்யான தொடர்புகளை உருவாக்கித் தரும் வேதம்; எண்ணற்றோர் தொடர்ந்து கடவுளைக் கண்டு அருளாற்றல் பெற்று அருட்பயன்களை மக்களுக்கு வாரிவாரி வழங்குகின்ற வேதம், பகுத்தறிவுப் பூர்வமாக எல்லோரும் புரிந்து ஏற்றுக் கொள்ளும் வண்ணம் பிண்டம், அண்டம், பேரண்டம், அண்டபேரண்டம், உலகின் தோற்றம், பயிரின உயிரினத் தோற்றம், மானுட இனங்கள், மொழிகள், நாடுகள் முதலியவற்றின் தோற்றமும் வளர்ச்சியும், முற்பிறப்பு, மறுபிறப்பு, பிறப்பு, இறப்பு, இப்பிறப்பு, கடவுளர் உலகு, கடவுளர் வகை, கடவுளர் வாழ்வியல், கடவுளர்களுக்கும் மானுடர்களுக்குமிடையே உள்ள உறவு முறையும், உரிமை முறையும், கோயில் வகை, பூசை வகை, அருளாளர் வகை, தனிமனித வாழ்வியல், குடும்ப வாழ்வியல், சமுதாய வாழ்வியல், அரசியல் வாழ்வியல், சமய வாழ்வியல்.... முதலிய இன்னோரன்ன பிற அனைத்தையும் விளக்குகின்ற வேதம்... என்று பல சிறப்புக்களையும், தனித்தப் பெருமைகளையும், தன்னிகரற்ற உரிமைகளையும் பெற்றுத் திகழும் வேதமான இந்து வேதத்தை வெளிக் கொணரும் பணியைத் துவக்கி யுள்ளார். இதனைப் புரிந்து உலகோர் செயல்பட்டுப் பயனடைதற்கு விடுக்கும் அழைப்பாகவே இந்த 'இந்துவேத முன்னுரை' வெளியிடப் படுகிறது.

3. இந்த இந்துவேதம் 'தமிழர்கள்தான் அருளுலகின் மூலவர்கள், நாயகர்கள், காவலர்கள், வாரிசுகள், வித்துக்கள், சொத்துக்கள்' என்றும், "தமிழர்களின் உள்ளங்களும் இல்லங்களும்தான் அருளுலகின் விதைப் பண்ணைகள், நாற்றுப் பண்ணைகள், நாற்றங்கால்கள்" என்றும், "தமிழினமே அண்ட பேரண்ட அருளாட்சி புரியும் பதினெண் சித்தர்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட அருளினம்" என்றும் 'தமிழகம் தான் அண்ட பேரண்டங்களிலிருந்து பதினெண்சித்தர்கள், பதினெட்டாம்படிக் கருப்புகள், நாற்பத்தெட்டு வகைப்பட்ட கடவுள்கள், நாற்பத்தெட்டு வகைப்பட்ட வழிபடு நிலையினர்கள்... முதலியோர் முதன்முதல் வந்து தங்கி அருளுலகின் தாயகமாக, பிறப்பிடமாக, காப்பிடமாகத் தமிழகமே என்றென்றும் விளங்கட்டும், செயலாகட்டும், நிலைபேறு பெறட்டும் என்று வாழ்த்தியுள்ளனர்' என்றும், 'தமிழ்மொழியே என்றென்றும் அண்ட பேரண்ட அருளுலக ஆட்சிமொழியாக விளங்கட்டும்' என்றும் 'தமிழ் மொழியே கடவுளர் மொழி, தெய்வமொழி, தேவமொழி' என்றும், 'தமிழ்மொழி எல்லா வகைப்பட்ட கடவுளர்களையும்,

மனிதரைத் தேடி வந்து உதவி செய்யும்படி செய்யும் ஆற்றலுடைய ஒரே ஓர் ஒப்புயர்வற்ற **அருள்மொழி'** என்றும், 'தமிழ்மொழியே எல்லா வகைப்பட்ட மனிதரும் எல்லா வகைப்பட்ட கடவுளரையும் தேடிச் சென்று சந்தித்திடவோ, அல்லது தங்களிருப்பிடத்திற்கு வரவழைத்தோ உதவி செய்யும் பேராற்றலுடைய ஒரே ஓர் அரிய **அருள்மொழி**' என்றும், 'தமிழ்மொழியி லிருந்துதான் இம்மண்ணுலகின் மொழிகள் அனைத்தும் தொடர்ந்து தோன்றிக் கொண்டிருக்கின்றன என்பதால் எல்லா மொழியின் ஒலிகளிலும், தமிழ்மொழியின் அருளொலி கணிசமான அளவாவது இருக்கின்றன. எனவே, இந்துவேத வாக்குகளையும், வாக்கியங்களையும், வாசகங்களையும், உலக மொழியினர் தமிழில் ஒலிப்பது போல் திருத்தமாக ஒலிக்கும்படி செய்தால் உலக மொழியினர் அனைவரும் அருட்செல்வத்தைத் துய்த்து உய்வு பெற முடியும்' என்றும் மிகமிகத் தெளிவாக எளிமையாகக் கூறுகிறது. எனவே, **தமிழ் மொழியில் அறிவும், புலமையும், சொல்லாற்றலும், ஆழ்ந்த ஈடுபாடும்... உடைய தமிழர் அனைவரும் தங்களை இந்துவேத ஆச்சாரியாராக ஆக்கிக் கொள்ள வேண்டும்! ஆக்கிக் கொண்டேயாக வேண்டும்.**

தமிழர்கள், இந்து வேத ஆச்சாரியார்களாகத் தயாரானால்தான், அருளாற்றல் ஊற்றெடுத்து ஆற்றுப் பெருக்காய் ஓடச் செய்யும் தமிழ்மொழியின் 'எழுத்தொலிகளையும், சொல்லொலிகளையும், சொற்றொடர் ஒலிகளையும்' ... முழுமையான ஒலிநயத்தோடு; எள் முனையளவு கூட ஒலி நயம் சிதையாமல், பிசிரடிக்காமல், குறையாமல், மாறாமல் ஒலித்து இந்துவேத ஒலியால் எங்கும் அருட்பயன் முழுமையாக விளைந்து; எல்லா மொழியாரும் இனத்தாரும் நாட்டாரும் நன்மையடையும்படிச் செய்யமுடியும்! செய்யமுடியும்!! செய்யமுடியும்!!!

மேலும் தமிழர்களே! இந்துவேத ஆச்சாரியார்களாகத் தயாரானால்தான் இந்துவேதத்தில் பொருளாழமிக்க பழந்தமிழ்ச் சொற்களுக்கும், சொற்றொடர்களுக்கும் உரிய உண்மையான, முழுமையான, நேரடியான பொருளை ஆராய்ந்தறிந்து எல்லா மொழியினருக்கும், எல்லா இனத்தாருக்கும், எல்லா நாட்டாருக்கும் விளக்கி யுரைக்க முடியும்! முடியும்!! முடியும்!!! ஏனென்றால் **'இந்துவேதம் அறிவுக்குப் புறம்பான, நம்ப முடியாத கட்டுக் கதைகளையும் கற்பனைக் கதைகளையும் தேவதைக் கதைகளையும் பெற்றிருக்க வில்லை! பெற்றிருக்க வில்லை!! பெற்றிருக்க வில்லை!!! பெற்றிருக்கவே இல்லை.'** அதனால், **தமிழ் மொழியில் நல்ல பயிற்சியும், தேர்ச்சியும், முதிர்ச்சியும் உடைய தமிழர்கள் தாங்களாகவே விரும்பி இந்துவேத ஆச்சாரியாராகத் தயாரானால்தான் அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் உள்ள இந்து வேதம் முழுமையான அளவில் இந்த உலகம் முழுதுமுள்ள எல்லா மொழியினருக்கும், எல்லா இனத்தவருக்கும், எல்லா நாட்டவர்க்கும் அருளுலகப் பயன்களை நல்கி உலக மானுடர் அனைவரும் நலமடையச் செய்ய முடியும்**. எனவே, தமிழர்களே! இந்து வேத ஆச்சாரியாராகிட முன்வாருங்கள்! முன்வாருங்கள்!! முன்வாருங்கள்!!!

தமிழ்ப் பெருமக்களே! பதினெண்சித்தர் வழங்கியுள்ள இந்து வேதத்தை மீண்டும் பரப்புவதால் என்ன பயன் ஏற்படப் போகிறது? இன்றைக்கு யாருக்கு வேதத்திடம் மதிப்பும், நம்பிக்கையும் இருக்கின்றது? அநேகமாக வேதத்தை விரும்புகிறவர்கள், மதிக்கிறவர்கள், போற்றுகிறவர்கள், வேதத்தை வரவேற்கிறவர்கள் யாருமே இல்லை! ... என்று சட்டென்று பதில் கூறத்தான் துடிப்பீர்கள், நீங்கள். உங்களுடைய துடிப்பு நியாயமானதுதான், உண்மையானதுதான். இதற்குப் பதில் சொல்லும் பொறுப்பைப் பதினெண் சித்தர் மடம் ஏற்றுக் கொள்ளுகிறது.

தமிழ்ப் பெருமக்களே! இன்றைக்குத் தெற்கேயுள்ள கன்னியாகுமரி முனையிலிருந்து; வடக்கேயுள்ள வட இமயத்தின் பனிமூடிய விளிம்பு வரை வாழும் இந்திய மக்களிடையில் ஒரே மாதிரியான பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள், விழாக்கள், திருநாள்கள், புராணங்கள், கடவுள்கள்... தான் இருக்கின்றன. இவற்றின் துணையால்,

வழிகாட்டலால்தான் இந்தியத் துணைக்கண்ட மக்கள் வாழுகிறார்கள். இந்த வாழ்க்கையை **'இந்துமத வாழ்க்கை'** என்று சொல்லுகின்ற வழக்கம் படித்தவர் முதல் படிக்காத பாமரர் வரை பெற்றுள்ளனர். இவற்றுக்கும் மேலாக இந்த இந்தியத் துணைக்கண்டத்து மக்கள், தங்களை 'இந்துக்கள்', 'இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள்', ... என்று மிகத் தெளிவாகக் கூறுகிறார்கள், நம்புகிறார்கள், வாழையடி வாழையெனத் தொடர்ந்து எழுதி வைத்துள்ளார்கள். அத்துடன் இந்த இந்திய மக்கள் "தங்களுடைய இந்துமதத்தின் வேதம் - இந்துவேதம்" என்றும் கூறுகிறார்கள். ஆனால், இந்தியாவின் ஆயிரக்கணக்கான மைல் பரப்பளவில் வாழும் பல்வேறு மொழியினருக்-கிடையில்; எவருக்குமே

1. இந்துமதம் யாரால் தோற்றுவிக்கப் பட்டது?
2. இந்துமதம் எப்போது தோற்றுவிக்கப்பட்டது?
3. இந்துமதம் எங்கே? எந்த இடத்தில் தோற்றுவிக்கப் பட்டது?
4. இந்துமதத்தின் வேதமான இந்துவேதம் எந்த மொழியில் வெளியிடப் பட்டது?
5. இந்துவேதம் ஏன் முழுமையான வடிவில் இந்துக்களிடம் இல்லை?
6. இந்துவேதத்துக்குரிய வேதியர், சாத்திரியார், தோத்திரியார் பரம்பரைகள் என்னவாயின?
7. இந்துவேதத்தை தோற்றுவித்த மடம் என்னவாயிற்று?
8. இந்துமதத்தின் தலைமை ஆச்சாரியார் பரம்பரை என்னவாயிற்று?
9. இந்துமதத்தின் தலைமை ஆச்சாரியக் குருபீடம் என்னவாயிற்று?
10. இந்துவேதமும், இந்துமதமும் இந்தியத் துணைக்கண்டம் கடந்து பரவினவா?
11. இந்துவேதமும் இந்துமதமும் இந்தியாவிற்குள் மட்டுமே இருப்பது ஏன்?
12. இந்துமதத்தில் மட்டும் பிறரை இந்து மதத்துக்கு மாற்றுவது என்ற கருத்தோ செயலோ இல்லாமல் போனது ஏன்?

... ... ...

என்பன போன்ற வினாக்களை எழுப்பி; அவற்றிற்கு விடை தேடும் முயற்சி பிறக்கவில்லை! பிறக்கவில்லை!! பிறக்கவில்லை!!! பிறக்கவே இல்லை!!! ஏன்? ஏன்? ஏன்? என்று சிந்திக்கும் நிலை இன்றுதான் ஏற்பட்டிருக்கிறது? அதுவும் தமிழகத்தில்தான் இந்த வினாக்கள் கேட்கப் பட்டிருக்கின்றன. இந்த வினாக்களுக்குரிய விடைகளும் தமிழகத்தில்தான் இருக்கின்றன. அதுவும், **இந்தியத் துணைக்கண்டத்து மொழிகளுக்கு மட்டுமின்றி உலக மொழிகளுக்கெல்லாம் 'மூலமொழியாக', 'கருமொழியாக', 'தாய்மொழியாக' உள்ள தமிழ்மொழியில்தான் மேற்படி வினாக்களுக் கெல்லாம் உரிய விடைகள் இருக்கின்றன**. எனவேதான், தமிழில் புலமையும், ஆர்வமும் உடைய தமிழாசிரியப் பெருமக்கள் இந்துவேத ஆச்சாரியாராகி இந்து வேதத்தை இந்தியத் துணைக் கண்டம் முழுதும் மட்டுமின்றி; உலகம் முழுதும் விளக்கி யுரைக்க வேண்டும். அதாவது, **தமிழில் உள்ள இலக்கியங்கள் அனைத்துமே, உலக மக்கள் அனைவருக்குமே அறிவுரை கூறும் வண்ணம்தான் எழுதப் பட்டுள்ளன என்பதைத் தமிழர்களே தெரிந்து கொள்ளாமல், புரிந்து கொள்ளாமல் இருப்பதால்தான் தமிழரின் தத்துவம், சித்தாந்தம், பண்பாடு, நாகரீகம், ... முதலியவை தமிழர்களாலேயே விரும்பி ஏற்றுப் போற்றப் படாத நிலை உருவானது போல, இந்துவேதம் தமிழர்களாலேயே தெரிந்து போற்றிப் பேணப் படாததால்தான் "தமிழர்களே! இந்துமதம் தங்களுடையது, இந்துமதம் தங்களின் முன்னோரால்தான் தோற்றுவிக்கப்பட்டது. இந்துவேதம் தங்களுடைய தாய்மொழியான தமிழ் மொழியில்தான் இருக்கிறது" என்று பதினெண்சித்தர் மடம் எடுத்துக் கூறிட முன்வந்துள்ளது**.

4. தமிழ்ப் பெருமக்களே! **'தமிழரின் அகப் பண்பாடும், புறநாகரீகமும்தான் இந்துமதம்'** என்ற பேருண்மை முதலில் தமிழர்களுக்குத் தெரிந்தாக வேண்டும், புரிந்தாக வேண்டும். அப்பொழுதுதான், தமிழ்மொழியும், தமிழிலக்கியமும் முறையாகப் போற்றிப் பேணிப் பாதுகாத்துப் பயன்படுத்திடும் நற்காலம், பொற்காலம் உருவாகிடும்! உருவாகிடும்!!

உருவாகிடும்!!! அதற்காகத் தமிழப் பெருமக்களே! இந்துவேத ஆச்சாரியாராகுங்கள்.

5. தமிழ்ப் பெருமக்களே! 'சங்க இலக்கியங்கள்', 'பதினெண் மேல்கணக்கு நூல்கள்', 'பதினெண் கீழ் கணக்கு நூல்கள்' ... என்று பூரிப்போடும் பெருமையோடும் குறிப்பிடப்படும் இலக்கியங்களின் நோக்கும், போக்கும், ஊக்கும், 'உலகப் பொதுமை', 'உலகச் சமத்துவம்', 'உலகச் சகோதரத் தத்துவம்', 'உலக அமைதி', 'உலக ஒற்றுமை', 'உலகச் சமாதானம்', 'யாதும் ஊரே, யாவரும் உறவினரே', 'எல்லோரிடமும் அன்பாக இருக்க வேண்டும்' ... என்று பரந்து விரிந்த கருத்தினைப் பெற்றிருப்பதற்குக் காரணமே இந்துவேதம்தான்! இந்துவேதம்தான்!! இந்துவேதம்தான்!!! என்ற பேருண்மையை உணருங்கள். அதன் பிறகாவது தமிழிலக்கியங்களின் மூலமாகவும், கருவாகவும், தாயாகவும், அடிப்படையாகவும் இருக்கின்ற **இந்து வேதத்தைப் பரப்பித் தமிழ்ப் பண்பாட்டையும், நாகரீகத்தையும் காத்திடும் இந்துவேத ஆச்சாரியாராகுங்கள்**. 'தமிழாசிரியர்களால்தான் இந்துவேதத்தைப் பரப்பிப் பாதுகாக்க முடியும்', 'தமிழாசிரியர்களால்தான் இந்துமதத்தைப் பேணிப் பாதுகாத்திட முடியும்', 'தமிழாசிரியர்களால்தான் இந்துமதத்துக்குரிய இலக்கியச் செல்வங்கள் அனைத்தையும் இந்துக்கள் நன்கு தெரிந்து, புரிந்து, பயன்படுத்தி அரிய பெரிய நன்மைகளை அடைந்திட முடியும்' ..... இப்பேருண்மைகளை நன்கு எண்ணிப் பார்த்தாவது தமிழாசிரியர்களே, பெரு விருப்பத்தோடும், ஆழ்ந்த நம்பிக்கையோடும் இந்துவேத ஆச்சாரியாராகிட முன்வாருங்கள்.

6. தமிழ்ப் பெருமக்களே! பதினெண் சித்தர் மடம்தான், இம்மண்ணுலகுக்கு இந்து வேதத்தை அருளியது, இந்த இந்துவேதம் நான்கு உகங்களாக (யுகங்களாக) வாழ்ந்து வருகிறது. இந்த இந்துவேதத்தின் மூலம்தான், 'தமிழ் மொழியே அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழி', 'தமிழ் மொழியில்தான் இந்துவேதத்தின் முன்னூற்றுத் தொன்னூற்றுறு நூல்களும் இருக்கின்றன', 'தமிழ்மொழியும் தமிழரும் சிறப்பாக வாழ ஆரம்பித்து நாற்பத்து மூன்று இலட்சத்து எழுபத்து மூவாயிரத்து தொன்னூற்று நான்கு (43,73,094) ஆண்டுகள் (இந்த 1993 முடிய) ஆகின்றன', 'தமிழ் மொழியே உலகம் முழுதும் பரவியிருந்த ஒரு மொழி', 'தமிழ் மொழியிலிருந்துதான் உலக மொழிகள் அனைத்தும் தோன்றின'.... முதலிய பல அரிய பெரிய பேருண்மைகள் அறியப் படுகின்றன. உலகுக்குத் தெரிய வருகின்றன. இப்படித் தமிழ் மொழியின் பெருமையையும், உரிமையையும், 'தமிழரின் பெருமையையும் உரிமையையும் மிகத் தெளிவாக உலகுக்கு அறிவிக்கும் இந்துவேதத்தைப் பரப்பிடத் தமிழாசிரியர்களே! உங்களைத் தவிர வேறு யாரை இந்துவேத ஆச்சாரியாராகும்படி அழைக்க முடியும்?! அழைக்க முடியும்?! அழைக்க முடியும்?!

7. தமிழ்ப் பெருமக்களே! **இன்றைக்கு எல்லா நாடுகளிலுமே உள்நாட்டுக் குழப்பங்கள், கலவரங்கள், சண்டைச் சச்சரவுகள், போர்கள் நிகழுகின்றன. இவற்றோடு பெரும்பாலும் எல்லா நாடுகளுமே அண்டை அயல் நாடுகளுடன் போர் நிகழ்த்தத் தயாராகிக் கொண்டே இருக்கின்றன. இவற்றின் உச்ச கட்டமாக உலக நாடுகளே இரு பெரும் பிரிவாகி உலகப் போரை நிகழ்த்தத் தயாராகிக் கொண்டிருக்கின்றன**. 'இப்படிப்பட்ட சூழ்நிலையில் உலகுக்கே வழிகாட்டும் வல்லமையும் நல்ல வளமும் தமிழர்களுக்குத்தான் இருக்கின்றது' என்ற பேருண்மையை நிலைநாட்டிடத் தமிழ் மொழியிலுள்ள இந்துவேதத்தைத்தான் உலகம் முழுதும் அறிவிக்க வேண்டும். ஏனெனில், உலக மக்கள் இந்துவேதத்தைத் தெரிந்து புரிந்து ஆராய்ந்தறிந்து உணர்ந்திட்டால்தான்; இந்துவேத வழியில் 'தனிமனித வாழ்வு', 'குடும்ப வாழ்வு', 'சமுதாய வாழ்வு', 'அரசியல் வாழ்வு' எனும் நான்கு வகையான வாழ்வும் **வெறியற்ற அன்பும், பண்பும், அமைதியும், நிறைவும், நிம்மதியும் இனிமையும் விளைகின்ற நல்ல நெறிப்பட்ட வாழ்வாக மாறிடும்! மாறிடும்!! மாறிடும்!!! மாற்றப் பட்டிடும்! மாற்றப் பட்டிடும்!! மாற்றப் பட்டிடும்!!!** அப்படிப்பட்ட மாபெரும் சாதனையைச் சாதித்த பெருமை தமிழாசிரியருக்குக் கிடைக்க வேண்டும்!

கிடைக்க வேண்டும்!! கிடைக்க வேண்டும்!!! கிடைத்தாக வேண்டும்! கிடைத்தாக வேண்டும்!! கிடைத்தாக வேண்டும்!!! கிடைத்தேயாக வேண்டும். எனவே, **“தமிழ்ப் பெருமக்களே, தங்களுடைய தமிழ்த் தொண்டோடு தொண்டாகச் சேர்த்து ‘இந்துவேதம் பரப்பும் பணியையும்’ நீங்கள் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும். அதற்காகத் தமிழ்ப் பெருமக்கள் அனைவரும் இந்துவேத ஆச்சாரியார்களாகத் தயாராகியே தீர வேண்டும்! தயாராகியே தீர வேண்டும்! தயாராகியே தீர வேண்டும்.**

8. தமிழ்ப் பெருமக்களே அண்டபேரண்ட அருளுலக ஆட்சி மொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் உள்ள இந்துவேதத்தில்தான் ‘தனிமனித வாழ்வு விடுதலை’, ‘குடும்ப வாழ்வின் விடுதலை’, ‘சமுதாய வாழ்வின் விடுதலை’, ‘அரசியல் வாழ்வின் விடுதலை’, ‘மொழியின் விடுதலை’, ‘இனத்தின் விடுதலை’, ‘நாட்டின் விடுதலை’, ‘மதத்தின் விடுதலை’ என்று கூறப்படும் எட்டு வகையான விடுதலை யுணர்வும் வாழ்வும் வடிவப் படுத்திக் காட்டப் படுகின்றன. அதாவது, ‘மனித வாழ்வில் விடுதலையுணர்வு’ எல்லா நிலைகளிலும், எல்லா வகைகளிலும் பிழைத்திருக்க வேண்டும், தழைத்திருக்க வேண்டும் என்று இந்துவேதம் கூறுகிறது. இப்படிப்பட்ட ‘இன்றமிழ் இந்துவேதத்தை’, ‘செந்தமிழ் இந்துவேதத்தை’, ‘பைந்தமிழ் இந்துவேதத்தை’, ‘ஒண்டமிழ் இந்துவேதத்தை’, ‘வண்டமிழ் இந்துவேதத்தை’, ‘தீந்தமிழ் இந்துவேதத்தை’, ‘மென்தமிழ் இந்துவேதத்தை’, ‘அழகு தமிழ் இந்துவேதத்தை’, ‘அமுதத் தமிழ் இந்துவேதத்தை’, ‘அருட்டமிழ் இந்துவேதத்தை’, ‘அன்புத் தமிழ் இந்துவேதத்தை’, ‘அறிவுத் தமிழ் இந்துவேதத்தை’, ‘அன்னைத் தமிழ் இந்துவேதத்தை’, .... இந்துவேத வித்துக்களான தமிழாசிரியப் பெருமக்கள்தான் உலகம் முழுதும் பரப்பிட முன்வர வேண்டும். இதற்காகத் தமிழாசிரியப் பெருமக்களே! விரைந்து இந்துவேத ஆச்சாரியாராகத் தயாராகிட முன் வாருங்கள். அதுதான் நீங்கள் தமிழுக்கும், உலக மானுடருக்கும் ஆற்றும் மாபெரும் தொண்டு!

9. தமிழ்ப் பெருமக்களே! இந்த உலகில் தோன்றிய முதல் பெருநிலப் பரப்பான இளமுறியாக் கண்டம், பல்லாயிரம் கல் பரப்பளவு உடையதாக இருந்ததையும், அப்பெரு நிலப் பரப்பில் முதல் இனமாகத் தோன்றிய தமிழினத்தவர் மட்டும் அல்லாமல் பல்வேறு மொழி வழி இனமக்களும் நாட்டினரும் தோன்றினர் என்பதையும், மூன்று முறை கடல் கோள்களால் இம்மண்ணுலகு மிகப் பெரிய அழிவுகளை, இழப்புக்களை புதிய நிலப்பகுதி தோற்றங்களை.... எல்லாம் பெற்றிட்டது என்ற உலக வரலாற்றுச் செய்திகளையும் இம்மண்ணுலகில் பயிரினங்களின் வாழ்வியல் நிலைகளும், உயிரினங்களின் வாழ்வியல் நிலைகளும், மழை, காற்று, .... முதலிய இயற்கைச் சத்தியின் செயல்நிலைகளும்.... இந்த உலகைச் சுற்றியுள்ள நாள், கோள், மீன், இராசி, ... முதலியவற்றின் இயக்கங்களுக்கு ஏற்பத்தான் அமைகின்றன என்ற பேருண்மைகளையும், அறிவுப் பூர்வமாக பகுத்தறிவுக்குரிய முறையில் மிகத் தெளிவான காலக் கணக்கீட்டு அடிப்படையில் விளக்கி யுரைக்கின்றது. அருளூறு அமுதத் தமிழில் உள்ள இந்துவேத அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் உள்ள இந்துவேதத்தில்தான் நான்கு உகங்களுக்கும் (யுகங்களுக்கும்) உரிய நாற்பத்து மூன்று இலட்சத்து எழுபத்து மூன்றுயிரத்து தொன்னூற்று நான்கு (43,73,094) ஆண்டு என்று இன்றைய ஆங்கில ஆண்டு (1993) ஆயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொன்னூற்று மூன்று என்ற எல்லை வரை உள்ள நெடிய கால இடைவெளியின் கணக்கு இருக்கின்றது. அதாவது,

(அ) மணீசர்கள் விலங்குகளோடு விலங்குகளாக வாழ்ந்த

அனாதிக் காலம் = 4,85,920

(ஆ) மணீசர்கள் பதினெண்சித்தர்களின் இந்துவேதத்தால் மனிதர்களாக்கப்பட்ட பிறகு முதல் கடல்கோளினால் பேரழிவு ஏற்படும் வரை இருந்திட்ட முதல் உகம்

கீரன் உகம் (கிரேதாயுகம்) = 17,28,080

(இ) முதல் கடல்கோள் அழிவுக்கும் இரண்டாவது கடல்கோள் அழிவுக்கும் இடைப்பட்ட இரண்டாவது உகம்

தீரன் உகம் (திரேதாயுகம்) = 12,90,000

(ஈ) இரண்டாவது கடல்கோளுக்கும் மூன்றாவது கடல்கோளுக்கும் இடைப்பட்ட காலம்

தூரன் உகம் (துவாபரயுகம்) = 8,64,000

(உ) மூன்றாவது கடல்கோளுக்குப் பிறகு இன்றுள்ள கலியன் உகம் (கலி யுகம்) பிறந்து இன்றைய ஆங்கில ஆண்டு 1993 உடன் உள்ள காலம் = 5,094

குறிப்பு: இந்துவேதம் ஒன்றுதான் இந்த உலகம் எப்படித் தோன்றிற்று? எப்பொழுது தோன்றிற்று? இவ்வுலகில் பயிரினங்கள், உயிரினங்கள் எவ்வாறு தோன்றின? அப்படி பயிரினங்களும் உயிரினங்களும் தோன்றிய கால அளவும், அவை தோன்றிய முறையும் என்னென்ன? மணீசர்கள் எப்போது? எப்படித் தோன்றினார்கள்? இந்த மணீசர்கள் எப்போது? எப்படி? மனிதர்களாக மாறினார்கள்? இந்த மனித இனம் வாழப் போகும் நான்கு யுகங்களின் கால அளவுக் கணக்கீடு என்ன? இந்த நான்காவது யுகமான கலியுகம் எவ்வளவு காலத்துக்குப் பிறகு முடிவுக்கு வரும்? இந்தக் கலியுக முடிவுக்குப் பிறகும் இந்த உலகம் இருக்குமா? இருக்காதா? ... என்பன போன்ற வினாக்கள் அனைத்துக்கும் மிகமிகத் தெளிவான பகுத்தறிவுப் பூர்வமான, முறையான, நாகரீகமான, நம்பத்தக்க செய்திகள் இந்துவேதத்தில் இருக்கின்றன! இந்துவேதத்தில் இருக்கின்றன! இந்துவேதத்தில் இருக்கின்றன!

(ஊ) இந்தக் கலியுகத்தின் கால அளவு = 4,32,000

ஆனால் இன்று 1993 உடன் கலியுகம் ஆண்டுகள் = 5,094

மீதி ஆண்டுகள் = 4,26,906

அதாவது இந்த உலகம் இன்னும் நான்கு இலட்சத்து இருபத்தாறாயிரத்துத் தொள்ளாயிரத்து ஆறு ஆண்டுகள் (4,26,906) கட்டாயமாக இருக்கும்! இருக்கும்!! இருக்கும்!!! இருந்தே தீரும்.

**“இந்தக் கலியுகத்துக்குரிய 4,32,000 ஆண்டுகள் எனப்படும் இடைவெளிதான், இந்து வேதத்தை இம்மண்ணுலகுக்கு அருளிய பதினெண்சித்தர் மடத்தின் மடாதிபதியாகவும், இந்த மண்ணுலகில் இந்து மதத்தைத் தோற்றுவித்த பதினெண் சித்தர் பீடத்தின் பீடாதிபதியாகவும், இந்துவேத நாயகமாகவும், இந்துமதத் தந்தையாகவும், இந்து மதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரியக் குருபீடக் குருதேவராகவும் அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியாராகவும் செயல்படக் கூடிய குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூறார் எனப்படும் முப்பத்தொன்பது (39) பேர்கள் தோன்றிடுவார்கள்....”** என்று இந்துவேதம் கூறுகிறது. அதாவது கடந்த மூன்று உகங்களில் ஒன்பது ஞாலகுரு சித்தர் கருவூறார்கள் தோன்றி விட்டார்கள். ஆனால், இந்தக் கடைசி யுகமான கலியுகத்தில் மிகுந்த சிக்கல்களும், தொல்லைகளும், கலக்கங்களும், குழப்பங்களும், பிறச்சினைகளும், மாறுபாடுகளும், வேறுபாடுகளும், முரண்பாடுகளும், தேவையில்லாத மோதல்களும், பேரழிவுக்குரிய சண்டை சச்சரவுகளும், போர்களும் அதிகமாக நிகழும் என்பதாலேயே; அண்ட பேரண்டமாளும் பதினெண்சித்தர்கள் இப்படி இந்த நான்காவது உகமான கலியுகத்தில் மட்டும் முப்பத்தொன்பது ஞாலகுரு சித்தர் கருவூறார்கள் தமிழினத்தின், தமிழகத்தில் தோன்றி தமிழில் உள்ள இந்து வேதத்தின் மூலம் இந்த உலகைக் காப்பாற்றும் ஏற்பாட்டினைச் செய்துள்ளார்கள். இவற்றுக் கெல்லாம் மேலாக இக் கலியுகத்தில் முப்பத்தொன்பதாவது ஞாலகுரு சித்தர் கருவூறாராகத் தோன்றுபவர்தான் இந்த உலகில் தோன்றிடும் நாற்பத்தெட்டாவது (48) ஞாலகுரு ஆவார். [ஏற்கனவே முதல் மூன்று உகங்களில் ஒன்பது ஞாலகுரு சித்தர் கருவூறார்கள் தோன்றி விட்டார்கள்]. எனவே, இந்த இறுதி ஞாலகுரு எடுக்கும் முடிவுக்கு ஏற்ப அண்ட பேரண்டமாளும் பதினெண் சித்தர்கள் இந்த உலகின் பேரழிவை, முடிவை நிர்ணயிப்பார்கள். ஏற்கனவே, இதுபோல் பதினாறு சதுர் மறை

யுகங்கள் இந்த உலகம் அழிவினின்று காக்கப்பட்டிருக்கிறது என்று இந்துவேதம் கூறுகிறது..... **இப்படிப்பட்ட அரிய, பெரிய, சீரிய, உயரிய, நேரிய கருத்துக்களைக் காலக் கணக்கீட்டு அடிப்படையில் உலகுக்கு வழங்குகின்ற இந்த இந்துவேதம் அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் இருக்கின்றது என்ற பேருண்மையை ஒவ்வொரு தமிழரும் ஒரு நொடிப் பொழுதாவது** ஆழ நினைத்து நீளச் சிந்திக்க வேண்டும். அப்பொழுதுதான், ஒவ்வொரு தமிழரும் தாங்கள் தமிழகத்தில் தமிழினத்தில் தமிழனாகப் பிறந்து தமிழ் மொழி கற்றுத் தமிழராக வாழ நேரிட்டுள்ளது எண்ணற்ற பிறவிகளில் நோற்ற தவப் பயனே என்பதை யுணர்ந்து பேரின்பம் எய்திட இயலும். அத்துடன் ஒவ்வொரு தமிழரும் பெரிதும் முயன்று தங்களை **'ஓர் இந்துவேத ஆச்சாரியாராக'** ஆக்கிக் கொள்ளும் நன்முயற்சியில் ஈடுபட முடியும். இவற்றை நினைவுறுத்தும் பொருட்டே பதினெண்சித்தர் மடம் **"தமிழர்களே! இந்துவேத ஆச்சாரியாராகுங்கள்" என்ற அறிவிப்பு அழைப்பைத் தமிழகம் முழுதும் முழக்கிட ஆரம்பித்திருக்கிறது.** தமிழர்களே! சிந்தியுங்கள்! செயல்பட முன்வாருங்கள்!

10. தமிழ்ப் பெருமக்களே! உங்களில் பலர் 'இந்துவேதம்' ஒன்றைப் பற்றி நெடுங்காலமாக தமிழ் இலக்கியங்களிலும் தமிழர் சமயத் துறையிலும் குறிப்பிடத் தக்க செய்தி எதுவுமே இல்லை. இப்பொழுது இந்துவேதத்தை வெளிக் கொணருவதால் மட்டும் என்ன பயன் ஏற்படப் போகிறது? இன்றைய நாட்டு நடப்பில் 'மதம்', 'சமயம்', 'கடவுள்', 'வேதம்', 'சாத்திரம்', 'கோயில்' ... என்ற சொற்களுக்கெல்லாம் மதிப்பே கிடையாது. பெரும்பாலும் யாருமே இச்சொற்களை நம்புவதில்லை. இன்னும் சொல்லப் போனால் மேற்படிச் சொற்களெல்லாம் 'மூடநம்பிக்கைக்குரிய சொற்கள்', 'ஏமாற்றுக்காரரின் சொற்கள்', 'மதவெறியை வளர்க்கும் சொற்கள்' ... என்ற கருத்தோட்டமே தமிழக மக்களிடையே இருக்கின்றது.

இந்நிலையில்

(அ) செந்தமிழ் மொழியில் உள்ள இந்துவேதம்தான் அனைத்துச் சமய சமுதாய அரசியல் இலக்கியச் சீர்கேடுகளையும் சரிப்படுத்தும்.

(ஆ) செந்தமிழ் மொழியிலுள்ள இந்துவேதப் பூசைமொழி, பூசைவிதி, தத்துவம், சித்தாந்தம் முதலியவைதான் அக வாழ்வையும், புறவாழ்வையும் நலப்படுத்தும், வளப்படுத்தும், செம்மைப்படுத்தும்

(இ) செந்தமிழ் மொழியில் உள்ள இந்துவேத வாழ்வே மணீசரை மனிசராக்கும்

(ஈ) செந்தமிழ் மொழியில் உள்ள இந்துவேத மதமான இந்துமதமே தமிழர் மதம், இதுவே தமிழ்மொழியிலுள்ள சங்க இலக்கியங்களான

(a) **'பதினெண் மேல்கணக்கு நூல்கள்'** எனப்படும் மானுட வாழ்வை விளக்கும் இலக்கியங்கள். இவை நேத்தர, நேத்திர, நேத்திற, வேத்தர, வேத்திர, வேத்திறங்கள் என்று வாழ்வியலின் ஆறுவகைப்பட்ட நிலைகளை, கலைகளை விளக்குகின்றன.

(b) **'பதினெண் மையக் கணக்கு நூல்கள்'** எனப்படும் மதத்துறை வாழ்வுக்குரிய இலக்கியங்கள். இவை, சாத்தர சாத்திர சாத்திற தோத்தர தோத்திர தோத்திறங்கள் என்று மதத் துறையின் ஆறுவகைப்பட்ட நிலைகளை, கலைகளை விளக்குகின்றன.

(c) **'பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்'** தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல்வாழ்வு முதலியவற்றுக்குரிய நீதிகளை, அறங்களை விளக்கும் இலக்கியங்கள். இவை, அத்தர, அத்திர, அத்திற, சூத்தர, சூத்திர, சூத்திறங்கள் என்று மதத்துறையின் ஆறு வகைப்பட்ட நிலைகளை, கலைகளை விளக்குகின்றன.

(d) ஐம்பெருங் காப்பியங்கள்,

(e) ஐஞ்சிறுங் காப்பியங்கள்

(f) பன்னிரு திருமுறைகள்

(g) நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்

(h) கம்ப ராமாயணம்

(i) கந்த புராணம்

(j) திருவிளையாடல் புராணம்

(k) அரிச்சந்திரன் புராணம்

(l) வில்லிபுத்தூரார் பாரதம் (பெருந்தேவனார் பாரதம்)

(m) நளவெண்பா

(n) சைவ சமய நூல்கள்

(o) முத்தொள்ளாயிரம்

(p) பெருங்கதை

(q) தொண்ணூற்றுஆறு பிரபந்தங்கள் ... முதலியவற்றில் விளக்கப் பட்டிருக்கிறது.

(உ) இந்துவேதம் தமிழ்மொழியில்தான் முதன்முதலில் எழுதப்பட்டது.

(ஊ) தமிழ்மொழிதான் இந்துமதத்தின் பூசைமொழி, அருளுலக ஆட்சி மொழி என்றெல்லாம் கூறுவதால் இந்து மதத்துக்கோ! இந்துக்களுக்கோ! தமிழர்களுக்கோ! என்ன பயன் ஏற்படப் போகிறது?

இந்துவேதத்துக்கும் மதிப்பு இல்லை! இந்துமதத்துக்கும் மதிப்பில்லை! தமிழ் மொழிக்கும் மதிப்பில்லை. எனவே, பதினெண்சித்தர் மடாதிபதியின் முயற்சி வீணான முயற்சியே! பயனில்லா முயற்சியே! பாவம், இவருக்கு இன்றைய தமிழக நிலையை எடுத்துக் கூறுவார் யாருமில்லையா? இவரது முயற்சி பற்றி இவரையே மறுசிந்தனை செய்யச் சொல்வது நல்லது!

இன்றைக்கு

(a) இந்துவேதக் கருத்துக்களை யார் மதிக்கப் போகிறார்கள்?

(b) இந்துவேதக் கருத்துக்களின் படி யார் வாழப் போகிறார்கள்?

(c) இந்துவேதத்தைப் பற்றி யாருக்கு அக்கறை இருக்கிறது?

இன்றைக்கு

(a) யார் தமிழை மதிக்கிறார்கள்?

(b) இந்துவேதம் தமிழ் மொழியில்தான் முதன் முதலில் வெளியிடப் பட்டது என்ற உண்மையை யார் வரவேற்கப் போகிறார்கள்?

(c) அதுவும் பெரும்பாலான தமிழாசிரியர்கள் நாத்திகர்களாகவே இருக்கின்ற இன்றைய காலக் கட்டத்தில் இந்து வேதத்துக்கு எப்படி வரவேற்பு இருக்க முடியும்?

நாட்டு நடப்பில் அரசும் அரசியல் வாதிகளும் இந்துமத வெறி கூடாது என்று கூறிக் கொண்டிருக்கும் நாத்திக வாதிகளாக (1) மதப் பொதுமை (2) மதப் பொறை (3) மதச் சமத்துவம் (4) எம்மதமும் சம்மதம் ... என்று கூறும் இந்துமத உணர்வற்றவர்களாக இருக்கின்றார்கள். இப்படிப் பட்ட இன்றையக் காலக் கட்டத்தில் நாத்திக, இந்துமதப் பற்றற்ற, இந்துமத உணர்வற்ற, இந்து மதத் துரோக விரோத நோக்கும், போக்கும், ஊக்கும் மிகுந்த! மிகுந்த!! மிகுந்த!!! காலக் கட்டத்தில் 'இந்துவேதம்', 'இந்துவேத நூல்கள்', 'இந்துமதம்', 'இந்து மத நூல்கள்', .... என்று கூறிக் கொண்டு செயலாற்றப் புறப்பட்டிருக்கும் பதினெண் சித்தர் மடாதிபதிக்கு, இந்துவேத நாயகத்துக்கு, இந்துமதத் தந்தைக்கு, அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் சித்தருக்கு தேவையில்லாத மறுப்பும், எதிர்ப்பும், வெறுப்பும், கேலியும், கிண்டலும்தானே பரிசாகக் கிடைக்க முடியும்?!?!?!.... என்று பலர் பேசுவது, சிலர் எம்மிடம் மறைமுகமாகக் கூறுவதும் எமக்குத் தெரியும்! தெரியும்!! தெரியும்!!!....

இது மட்டுமல்லாமல் இன்றைய தமிழக மக்களில் எவ்வளவு பேர் ஆத்திகர்களாக இருக்கிறார்கள்? எவ்வளவு பேர் நாத்திகர்களாக இருக்கிறார்கள்? எவ்வளவு பேர் தாங்கள் நாத்திகரா? ஆத்திகரா? என்று எண்ணிப் பார்க்காமல்! எண்ணிப் பார்க்கத் தெரியாமல்! எண்ணிப் பார்த்தும், எந்த முடிவிற்கும் வர முடியாமல் வாழுகிறார்கள்.... என்பது பற்றியும் எமக்கு நன்றாகத் தெரியும்! தெரியும்!! தெரியும்!!! மேலே, நாட்டு நடப்பு பற்றி எமக்குத் தெரிந்துள்ளவைகளுக்கு எமது பதிலை முதற்கண் தமிழ்ப் பெருமக்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம் யாம்.

தமிழ் இலக்கியங்களிலோ, சமயத் துறையிலோ இந்துவேதம் பற்றிய செய்திகள் நெடுங்காலம் இல்லை என்று கூற நேரிட்டுள்ள நிலை ஏன் வந்தது? எப்படி வந்தது? யார்

யாரால் வந்தது? எப்பொழுது வந்தது?.... என்று இன்றைய தமிழ்ப் பெருமக்களும், தமிழின தமிழகச் சமயத் துறையினரும் சிந்திக்க வேண்டும்! சிந்திக்க ஆரம்பிக்க வேண்டும்! சிந்திக்கும்படிச் செய்ய வேண்டும்! .... என்பதுதான் பதினெண் சித்தர் மடாதிபதியின் நோக்கமும், எதிர்பார்ப்பும். ஏனெனில், பசித்து வந்தவர்க்குத்தான் விருந்தின் சுவையும் பயனும் முழுமையாகப் புரியும். பதினெண் சித்தர் மடத்தில் மட்டுமின்றி தமிழகத்தின் மலைகளிலும், காடுகளிலும் .... வாழுகின்ற தவசிகளிடமும், இருடிகளிடமும், முனிவர்களிடமும், தமிழின அருளாளர்களிடமும், இந்தியத் துணைக் கண்டத்து மலைகளிலும், காடுகளிலும், மடாலயங்களிலும் வாழுகின்ற மெய்யான இந்துவேத மதத் துறவிகளிடமும், முனிவர்களிடமும், இருடிகளிடமும், இல்லறச் சான்றோர்களிடமும், இந்துவேத நூல்களும், இந்து வேதத்தின் நான்கு உக வரலாறுகளும்; இந்துமத வீழ்ச்சி! விழிச்சி! எழிச்சி! சுழற்சி! சிதைவு! சீரழிவு! மறுமலர்ச்சி! வளர்ச்சி!.... வரலாறுகளும், இந்துமத நூல்களும், இந்துவேத வித்துக்களான அருளாளர்களின் போதனைகள், சாதனைகள், வாழ்வியல்கள், ... முதலியவை பற்றிய வரலாறுகளும் உரிய முயற்சி யுடையவர்களுக்கு வழங்கிடத் தயாராக இருக்கின்றன! இருக்கின்றன!! இருக்கின்றன!!! இவற்றைப் பெறத் தமிழாசிரியர்கள் தயாரா???

இப்பொழுது, இந்துவேதத்தை வெளிக் கொணருவதால் மட்டும் என்ன பயன் ஏற்படப் போகிறது? என்ற வினுக்குரிய விடையில்தான்

"தமிழர்கள் உலகப் பொதுநோக்கு உடையவர்கள்"

"தமிழர்கள் உலகச் சமத்துவ சகோதரத் தத்துவ நோக்கும், போக்கும் உடையவர்கள்"

"தமிழர்களால்தான் உலக ஒற்றுமை, உலக அமைதி, உலகச் சமாதானம்... முதலியவைகளை உருவாக்க முடியும்"

"தமிழர்கள்தான், அருளுலகின் மூலவர்கள், காவலர்கள், வாரிசுகள், சொத்துக்கள், தத்துவ வித்துக்கள்"

"தமிழர்கள் உலக மக்களை நல்வாழ்வுக்கு இட்டுச் செல்லும் விழியாக, வழியாக, வழிகாட்டியாக, வழித்துணையாக, வழிப்பயனுகச் செயல்பட முடியும்"

"தமிழ் மொழியில் உள்ளவைதான் உலக இனவெறி, மதவெறி, நாடு பிடிக்கும் ஆதிக்க வெறி... முதலிய வெறிகளைக் கட்டுப்படுத்தி நெறிப்பட்ட வாழ்வைத் தரமுடியும்! தரமுடியும்!! தரமுடியும்!!!

... என்ற பேருண்மைகள் இன்றைக்கு உலகுக்குத் தெரிந்திட்டால்தான் இந்த உலகை உடனடியாகப் பேரழிவுகளில் இருந்து காப்பாற்ற முடியும். அத்துடன் இன்றைய உலக மக்கள் அருளுலக இருள்களால் அவதிப் பட்டுத் தொல்லைப் பட்டுத் துன்பப்பட்டுத் துயருறுவதை யெல்லாம் தடுக்க வேண்டும், நீக்க வேண்டும்.... என்றால் இன்றைக்கே, இப்பொழுதே இந்துவேதமும், அதன் வரலாறும், வாழ்வியலும், போதனையும், சாதனையும் வெளிப்படுத்தப் பட்டேயாக வேண்டும். அப்பொழுதுதான், இந்துவேதத்தால் தமிழர்களின் ஒற்றுமை, (தென்னிந்தியர்களின்) திராவிடர்களின் ஒற்றுமை, இந்தியர்களின் ஒற்றுமை, ஆசியக் கண்டத்தவர்கள் ஒற்றுமை, உலக ஒற்றுமை .... முதலியவை படிப்படியாக உருவாகிடும்.

உலகியலாக உள்ள மொழிப் பிரச்சினைகள், இனப் பிரச்சினைகள், வரலாற்று சிக்கல்கள், குழப்பங்கள், மயக்கங்கள், மதப் போட்டா போட்டிச் சண்டைச் சச்சரவுகள், போர்கள், அருளுலக ஐயங்கள், மனித உயிர், உடல், முற்பிறப்பு, மறுபிறப்பு, இறப்பு, பிறப்பு.... முதலியவை பற்றிய கருத்துத் தேக்க, வீக்க, மயக்க, கலக்கக் குழப்பங்கள் முதலியவை அனைத்தும் "அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் உள்ள இந்து வேதத்தால்தான் அகற்றப் பட முடியும்! அகற்றப்பட முடியும்!! அகற்றப்பட முடியும்!!! இவைதான், இன்றைக்கு இப்பொழுது இந்துவேதத்தை வெளியிட முற்படுவதன் நோக்கம்! தத்துவம்! எதிர்பார்ப்பு! எனவே, இந்துவேதத்தை உலக அளவில் வெளியிடும் மாபெரும் பணியில் பங்கு பெற **தமிழர்களே! இந்துவேத ஆச்சாரியாராகுங்கள்** என்று அழைக்கிறோம்.

*[... அடுத்த இதழில் தொடரும்]*

*இந்துவேதம் முந்நூற்றுத் தொண்ணூற்ருறு (396) நூல்களை உடையது என்பதால்; அதிலுள்ள கருத்துக் குவியல்களை, செய்திக் குவியல்களைப் பற்றிப் பொதுமக்கள் ஓரளவாவது தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்; 'இந்துவேத சிந்தனைகளை' தொடர்ந்து வெளியிடும் முயற்சி மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.*

*இம்முயற்சிக்கு இந்துக்கள் பேராதரவு தர முன்வர வேண்டும். கோயில் உண்டியல்களில் பணம் செலுத்துவது போல்; இந்துவேத நூல்களும், இந்துமத நூல்களும், இவைபற்றிப் பெருவாரியான பொதுமக்கள் தெரிந்து கொள்வதற்காக எழுதப்படும் நூல்களும் அச்சேறி வெளிவருவதற்குப் பத்தி உணர்வுள்ள இந்துக்கள் தங்களுடைய உதவிகளை வாரிவாரி வழங்கிட முன்வர வேண்டும்.*

*பெரும்பாலான இந்துக்களுக்கு 'இந்துவேதம்' என்ற ஒன்று இருப்பதே தெரியாது. இந்தத் 'தெரியாமை' அகற்றப்பட்டால்தான் இந்துமதம் விழிச்சி பெறும்! எழிச்சி பெறும்!! செழிச்சி பெறும்!!! ஆட்சிமீட்சி அடைந்திடும்.*

*இந்துவேதம் தெரிந்தால்தான் இந்துக்கள் இந்துமதப் பற்ரோடும் ஒற்றுமையோடும் வாழ்ந்திடுவர். 'இந்துவேதம் புரிந்தால்தான் இந்துக்கள் தங்களின் அகப்பண்பாட்டினையும், புறநாகரிகத்தையும் காப்பாற்றிட முன்வருவார்கள்; உரிய முயற்சிகளைப் பெரிய அளவில் மேற்கொண்டிடுவார்கள்', 'இந்துவேதம் தெரியாத, அறியாத, புரியாத, சமய, சமுதாய, அரசியல், கலை, இலக்கிய, தொழில் துறைத் தலைவர்கள்தான், இந்துவேத வளர்ச்சிக்கும், இந்துமத வாழ்வியல் பயிற்சிக்கும் எதிர்ப்பாளர்களாக! மறுப்பாளர்களாக! வெறுப்பாளர்களாக! நாத்திகர்களாக! வாழுகிருர்கள். இதைத் தடுப்பதற்காகவே! எல்லாத் துறையையும் சேர்ந்தவர்களுக்கு 'இந்துவேத அறிவை' வழங்குவதற்காகவே 'இந்துவேத சிந்தனைகள்' தொடர்ந்து வெளியிடப் படுகின்றன!*

THE INDHU TEMPLES ARE THE ENCYCLOPAEDIA OF THIS UNIVERSE!

THE SIDDHA INDHU MYSTICISM AND MEDICINE ARE THE EYES OF MAN!

THE INDHUISM OF THE SIDDHARS IS A SOCIAL SCIENCE; IT CULTIVATES THE BEST CONDUCT AND CHARACTER!

THE INDHUISM OF THE SIDDHARS IS THE HISTORY OF HUMAN CIVILISATION ON THIS HEMISPHERE!

THE INDHUISM OF THE SIDDHARS CREATES ALL EARTHLY PLEASURES AND DIVINE BLISS!

THE INDHUISM IS THE TREASURE OF KNOWLEDGE AND WISDOM!

THE INDHUISM IS THE PROPER MEDICINE FOR THE SICK; AND ENJOYABLE FEAST FOR THE HEALTHY!

